‘கேலோ இந்தியா’ இளைஞர் விளையாட்டுப் போட்டிகளை நடத்த தமிழ்நாடு தேர்வு!

# மணிப்பூர் நிலவரம் கருதி அம்மாநில வீரர்களுக்கு தமிழ்நாட்டில் பயிற்சி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு!

சென்னை, ஜூலை 24-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மணிப்பூர் மாநில விளையாட்டு வீரர்களை தமிழ்நாட்டில் விளையாட்டுப் பயிற்சிகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருப்பதாவது:-

தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு போட்டிகளில் பங்கேற்கும் விளையாட்டு வீரர்களுக்கு உலகத்தரம் வாய்ந்த பயிற்சி வசதிகள் மற்றும் உள்கட்டமைப்புகளை வழங்குவதில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்ந்து வருகிறது. தமிழ்நாடு அரசு எடுத்துவரும் விளையாட்டு மேம்பாட்டு முன்னெடுப்பு திட்டங்களால், தேசிய மற்றும் சர்வதேச அளவில் பல்வேறு விளையாட்டுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் அடுத்தடுத்து வெற்றிகளைப் பெற்று வருகின்றனர்.

**மணிப்பூர் நிலவரத்தை கவலையுடன் பார்க்கிறோம்!**

விளையாட்டுப் போட்டிகளில் திறமைக்கு பெயர் பெற்ற மாநிலமான மணிப்பூரில் உள்ள தற்போதைய நிலையை தமிழ்நாடு மிகுந்த கவலையுடனும், வேதனையுடனும் பார்க்கிறது. மணிப்பூர் எப்போதும் தேசிய மற்றும் சர்வதேச தரத்திலான சாம்பியன்களை, குறிப்பாக பெண் சாம்பியன்களை உருவாக்கி வந்துள்ளது. கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளை அடுத்த ஆண்டு (2024) நடத்துவதற்கான மாநிலமாக தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த போட்டியினை சிறப்பாக நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன.

“யாதும் ஊரே யாவரும் கேளிர்” எல்லா ஊரும் எனது ஊர். எல்லா மக்களும் எனது உறவினர் என்று நினைத்து, அன்பே வாழ்வின் அடிப்படை ஆதாரம் என்று வாழ்ந்தால், இந்த வாழ்வு மிகவும் இனிமையானதாகத் திகழும் என்ற கணியன் பூங்குன்றனாரின் புறநானூற்று வரிகள்தான் தமிழர் பண்பாட்டின் அடையாளமும், அடித்தளமும் ஆகும்.

**சிறந்த வீரர்களுக்கு பயிற்சி! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உதவ வேண்டும்!**

அந்த வகையில், தற்போது மணிப்பூர் மாநிலத்தில் ஆசிய விளையாட்டு, கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் போன்ற தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளுக்கு பயிற்சி அளிக்க சாதகமற்ற சூழ்நிலை நிலவுவதால், அம்மாநிலத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் தமிழ்நாட்டிற்கு வருகை தந்து பயிற்சிகள் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நான் கேட்டுக் கொண்டுள்ளேன்.

இவ்விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு அரசு விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பில் உயர்தர பயிற்சிகள் அளிக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்து தரப்படும் என இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உறுதியளித்துள்ளார்.

**தமிழ்நாட்டுக்கு வருகை தரும் வீரர்கள் தொடர்பு கொள்ள வசதி!**

மணிப்பூர் மாநிலத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் விளையாட்டு வசதிகளை பயன்படுத்திக் கொள்ள அவர்களின் விவரங்களை அதாவது தங்கள் பெயர், முகவரி, அடையாளச் சான்று, தொடர்பு விவரங்கள், விளையாட்டு சாதனைகள் மற்றும் பயிற்சித் தேவைகள் போன்ற விவரங்களுடன் மின்னஞ்சல் (sportstn2023@gmail.com) முகவரியில் மற்றும் தொலைபேசி எண். +918925903047 ஆகியவற்றில் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

---

மணிப்பூர் சம்பவம்:

# குடியரசுத் தலைவர் பேசாமலிருப்பது வேதனை!

## ஜார்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன் கடிதம்!

ஜார்கண்ட், ஜூலை 24 -

மணிப்பூர் சம்பவம் குறித்து குடியரசுத் தலைவராவது வாய் திறந்து பேச வேண்டும் என ஜார்கண்ட் முதலமைச்சர் ஹேமந்த் சோரன் வலியுறுத்தியுள்ளார்.

மணிப்பூர் வன்முறைக்கும், பழங்குடியின பெண்கள் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட நிகழ்வுக்கும் ஜார்கண்ட் முதலமைச்சர் ஹேமந்த் சோரன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், மணிப்பூர் விவகாரத்தில் நீதி கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.



பழங்குடியினத்தில் பெண்ணாக பிறந்து வளர்ந்து நாட்டின் மிக உயரிய பதவியை வகித்து வரும் தாங்கள், மணிப்பூரில் பழங்குடியின பெண்கள் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட நிகழ்வுக்கு கண்டனம் தெரிவிக்காமலும், வாய் திறந்து ஒரு வார்த்தை கூட பேசாமலும் இருப்பது மிகுந்த வேதனைக்குரியது என்று தெரிவித்துள்ளார்.

இதயத்தை பிளக்கும் மணிப்பூர் சம்பவம் குறித்து குடியரசுத்தலைவர் வாய் திறந்து பேச வேண்டும் என ஜார்க்கண்ட் முதலமைச்சர் ஹேமந்த் சோரன் வலியுறுத்தியுள்ளார்.

---

மலேசியா தலைநகர் கோலாலம்பூரில்

# அயலக தி.மு.க. அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா!

## தொல். திருமாவளவன் எம்.பி. சிறப்புரை! லண்டன் ஃபைசல் பங்கேற்பு!

சென்னை, ஜூலை 24-

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் அயலக தி.மு.க. மலேசிய மட்டும் அயலக தமிழ் இந்தியர்கள் அமைப்பு சார்பாக நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எழுச்சி தமிழர் தொல். திருமாவளவன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

அயலக தி.மு.க. மலேசிய தலைவர் திரு ஃபிர்தவ்ஸ் மற்றும் துணைத்தலைவர் ஜெய்லானி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு அரசு அயலக நலத்துறை உறுப்பினர் லண்டன் ஃபைசல், டத்தோ ஷாஹுல், ஈமான் பேரவையின் துணைச்செயலாளர் காசிம், துவான் ஜஃபருல்லா, துவான் கஸ்ஸாலி, புக்கிட் ஜலீல், மற்றும் ஏராளமான தமிழ் உணர்வாளர், பத்திரிக்கையாளர்கள், திமுக சொந்தங்கள் என கலந்து கொண்ட நிகழ்வில், பேராசிரியர், முனைவர் ஆனந்தராஜா எழுதிய அமைதிக்கல்வி, விழுமக் கல்வி என்ற புத்தகத்தை எழுச்சித்தமிழர் வெளியிட லண்டன் ஃபைசல் மற்றும் மலேசிய தொழில் அதிபர் ஜஃபருல்லா ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

---

ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# கடலூர் மேற்கு மாவட்ட மகளிர் அணி சார்பில் விருத்தாசலத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்!

விருத்தாசலம், ஜூலை 24-

கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (24.7.2023 திங்கள் கிழமை) காலை 9.30 மணி அளவில் விருத்தாசலம் பாலக்கரையில் மாவட்ட கழக துணை செயலாளர் ஆனந்தி சரவணன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் விருத்தாசலம் நகர மன்ற தலைவர் டாக்டர். சங்கவி முருகதாஸ் வரவேற்புரை ஆற்றுகிறார்.

மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் அமுதா விருத்தாசலம் நகர மன்ற துணைத் தலைவர் ராணி தண்டபாணி மங்கலூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் சுகுணாசங்கர் திட்டக்குடி நகர மன்ற தலைவர் வெண்ணிலா கோதண்டம் நெல்லிக்குப்பம் நகர மன்ற தலைவர் ஜெயந்தி ராதாகிருஷ்ணன் தொரப்பாடி பேரூராட்சி தலைவர் வனஜா சுந்தரவடிவேல் மங்கலம்பேட்டை பேரூராட்சி தலைவர் சம்தாத் பேகம் பாரி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தாய்மையை தலைகுனிய வைத்த மணிப்பூர் நிகழ்வை தடுக்க தவறிய ஒன்றிய மோடி அரசை கண்டித்து ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் மாநில மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் நிர்வாகிகள் மகளிர் அணி மகளிர் தொண்டரணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் பெருந்தலைவர்கள் தலைவர்கள் நகர பேரூர் பிரதிநிதிகள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொள்ளுகிறார்கள்.

---

ஆயிரம்விளக்கு மேற்கு - 109 ‘அ’ வட்ட அவைத் தலைவர் இரா.முத்துக்குமாரின் தந்தை

# முன்னாள் வட்டச் செயலாளர் சா.இராமமூர்த்தி 10ஆம் நினைவு நாள் நிகழ்ச்சி!

## நே.சிற்றரசு - தயாநிதி மாறன் எம்.பி. - அன்பகம் கலை - டாக்டர் எழிலன் பங்கேற்பு!

சென்னை, ஜூலை 24-

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 109 (அ) வட்ட அவைத் தலைவர் இரா.முத்துகுமாரின் தந்தையும் முன்னாள் வட்டச் செயலாளரும் முன்னாள் பொதுக்குழு உறுப்பினருமானசா.இராமமூர்த்தி அவர்களின் 10-ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி வருகின்ற 27.7.2023 அன்று



வியாழக்கிழமை மதியம் 12 மணியளவில் என்21, தெற்கு கங்கையம்மன் கோயில் 2-வது தெருவில் நடைபெறுகிறது.

இதில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், அன்பகம் கலை, ஆயிரம் விளக்கு சட்ட மன்ற உறுப்பினர் டாக்டர் எழிலன் நாகநாதன், பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம் ஆகியோர் பங்கேற்று அவரது திருவுருவப் படத்தை திறந்து வைத்து ஏழைகளுக்கு அன்னதானம் வழங்குகின்றனர்.

இதில் மருத்துவர் கலை கதிரவன், நுங்கை வி.எஸ். ராஜ், எம்.டி.ஆர்.நாதன், ஜோஸ் டேனியல், கு.விக்டர், ஆர்.என்.துரை, வி. எஸ்.கலை, எஸ்.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின்பாபு, புவி. பாலாஜி, என்.பி.இதயாத் பாஷா, ஸ்டெர்லிங் மோகன், ஆர்.பொன்னம்மாள், ப.கமலகண்ணன், ச.டேவிட் இன்பராஜ், வரதை த.பரி, க.சிட்டிபாபு, த.குணசேகரன், மு. மோகன், கே.எஸ்.தினேஷ் பிரபு, க.தங்கமணி, பா. சுரேஷ்குமார், அ.குப்பன், எம்.டி.ஆர்.புகழ், எஸ். பார்த்திபன், த.ஐசன், ஆர். சீனிவாசன், ஜெ.இருதயநாதன்,

எம்.ஏ.ஆருண் பிலிக்ஸ், எஸ்.அருண்குமார், டி. செல்வி, ஆர்.எம்.உமாதேவி, மேட்லின் மேரி, வி.தீபா, வி.வேல்குமார், எஸ்.ராதாபாய், ஜி.கே. ராஜா, எஸ்.மாலா, எல். வாஞ்சிநாதன், சு. நைனியப்பன், ஆர்.சேகர், ஆர். நீலகண்டன், என்.எஸ்.சுப்பிரமணியன், பி.கோவிந்தராஜன், எம்.டி.ஆர். சாரதி, என்.மோகன்வேல், மூ.சீனிவாசன், சே.ந.எல்லப்பன், வி.சுதாகர், சி.எம்.கமல், எஸ்.என்.குமார், க.அன்பழகன், பி.லோகநாதன், இ. லட்சுமணன், பி.ராஜேந்திரன், எஸ்.மகேஸ், க.செல்வம், எம்.மத்தியாஸ், கோ. ஞான மூர்த்தி, ஜெ.தமிழரசன், பி.ஐயப்பன், பி.பத்மநாபன், இ.சுரேஷ் குமார், த.பரமசிவம், கே. வெங்கடேசன், இசக்கியப்பன், எம்.மணிகண்டன், கே. புஷ்ப ராஜ், ஜி.செந்தில்குமார், கே.கார்த்திக், ஆர். சிவராமன், இளங்கோவன், ஆட்டோ சீனு, எஸ். வினோத் குமார், ஆர்.செந்தில்குமரன், என்.ரேவதி, சாந்தாமணி ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

வட்ட துணைச் செயலாளர் ஏ.விஜயகுமார் நன்றியுரையாற்றுவார்.

---




---

மணிப்பூர் சம்பவம்:

# நாடாளுமன்ற வளாகத்தில் இன்று எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம்!

புதுடெல்லி, ஜூலை 24 -

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட எதிர்க்கட்சிஎம்.பி.க்கள் திட்டமிட்டுள்ளனர். மணிப்பூர் விவகாரம் குறித்து பிரதமர் மோடி விளக்கம் அளிக்க வலியுறுத்திஇந்தஆர்ப்பாட்டம்நடத்தப்படும் என அறிவித்துள்ளனர்.

மணிப்பூர் விவகாரம் தொடர்பாகநாடாளுமன்ற இருஅவைகளிலும்பிரதமர் மோடி விளக்கம் அளிக்க வேண்டும் என வலியுறுத்தி நாடாளுமன்ற வளாகத்தில் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட உள்ளதாக எதிர்க்கட்சிகள் அறிவித்துள்ளன.

2024 மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு எதிராக ‘இந்தியா’ என்ற புதிய கூட்டணியை எதிர்க்கட்சிகள் உருவாக்கியுள்ளன.இக்கட்சிகளின் தலைவர்கள் மாநிலங் களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அறையில் இன்று காலை 10 மணிக்கு கூடி, மணிப்பூர்விவகாரம்குறித்து ஆலோசனை மேற்கொள்ள உள்ளனர்.

அந்த ஆலோசனைக்குப் பிறகு, கூட்டத்தொடரில் பங்கேற்பதற்கு முன்பாக நாடாளுமன்றவளாககாந்தி சிலை அருகே ஆர்ப்பாட்டம்நடத்ததிட்டமிட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா எம்.எஸ். அப்துல் மஜீத்

### ஜூலை 24 (2016)



ஒன்றிணைந்த திருச்சி மாவட்டத்தில் இருந்த புதுக்கோட்டை நகர துணைச் செயலாளர், தொடர்ந்து 17 ஆண்டுகள் நகரச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், புதுக்கோட்டை மாவட்ட அவைத்தலைவர், மாவட்ட பொறுப்புக்குழு செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகம் வளர பாடுபட்டவர்.

அறந்தாங்கி மாநாட்டு செயலாளராகவும், சேலம் சிறப்பு மாநிலச் செயலாளராகவும், புதுக்கோட்டை மாவட்டக் கழக கட்டிடக்குழு செயலாளராகவும் பணியாற்றியவர்.

புதுக்கோட்டை நகர வங்கி தலைவராகவும், புதுக்கோட்டை நகர்மன்ற உறுப்பினராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த கருப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு ஆறு மாதங்களும் – நெருக்கடிகால மிசா சட்டத்தில் 15 மாதங்களும் சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**